# வேலூர் மாநகராட்சி

## வேலூர் மாநகராட்சி மையஅலுவலகத்தில் தனி அலுவலரின் மாமன்ற அவசரக் கூட்டம் நாள் : 12.03.2020 வியாழன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும்

## மாமன்ற கூட்டப்பொருள்

**(1)** அரசு தனது ஆணை எண் (நிலை) 33 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை நாள்:03.03.2020ல் இம்மாநகராட்சிக்கு நான்கு உதவி வருவாய் அலுவலர் நிலையில் ஒரு வருடத்திற்கு தோற்றுவித்தம், இப்பணியிடங்களை தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்து வருங்காலங்களில் வேலூர் மாநகராட்சியின் வரி நிர்வாகம் மற்றும் வரி வசூலிப்பதில் ஏற்படும் முன்னேற்றங்களின் அடிப்படையில் பரிசீலிணை செய்யப்படும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அரசாணையினை பார்வையிட்டு பதிவு செய்யலாம்

(ந.க.எண்:சி1/6091/2019)

**(2)** வேலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பாரக்ஸ் மைதானம் சாலை துவக்கத்தில் (வேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் உள்ள சாலையில்) ஆவின் பாலகம் பூத் அமைத்துக்கொள்ள 12′ x10′ சதுரடி பரப்பளவு ஒதுக்கிடு செய்து வழங்கிட பொதுமேலாளர் ஆவின் அவர்கள் வழங்கியுள்ள கடிதம் ந.க.எண்.004/வி.பி 1-2/19 நாள்:04.02.2020 கடிதம் மாமன்றத்திற்க்கு பார்வைக்கு வைக்கப்பட்டுகிறது மேற்படி கடித்ததின் மீது உதவி பொறியாளர், இளநிலைபொறியாளர், துப்புரவு அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பின்படியும், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் பூத் அமைத்துக்கொள்ளவும், மாத தரை வாடகையாக ரூ.4020/- என நிர்ணயித்து மேற்படி இடத்தில் சுமார் 6′ X 5′ பரப்பளவில் ஆவின் பாலகம் பூத் அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வேலூர் மாநகராட்சி சட்டம் 198 பிரிவு 259ன் கீழ் தற்காலிகமாக 6′ X 5′ பரப்பளவில் ஆவின் பாலகம் அமைத்துக்கொள்ள ஓராண்டுகளுக்கு பொது மேலாளர் ஆவின் வேலூர் அவர்களுக்கு அனுமதி வழங்கலாம்.
2. ஆவின் நிறுவனம் அரசு துறை நிறுவனம் என்பதால் ஓராண்டுக்கு அனுமதி வழங்கலாம். அதனை தொடர்ந்து மாத வாடகை கட்டணத்தை மாநகராட்சிக்கு மாதம் தோறும் உரிய காலத்தில் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் இந்த அனுமதி ரத்து செய்யலாம்.
3. இந்த அனுமதி ஆவின் பொது மேலாளர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆவின் பொது மேலாளர் மாநகராட்சி விதிகளையும், ஏனைய அரசு துறைகளின் விதிகளையும் நிறைவு செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் எந்த நேரத்திலும் இந்த அனுமதி ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கலாம்.
4. ஒவ்வொரு ஆண்டும் மாநகராட்சிக்கு உரிய விண்ணப்பம் அளித்து

அனுமதி புதுப்பித்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எப்1/419/2020/ம.4)

(3) வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20ன் கீழ் வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான TN 23 CC 7436 Tata AC வாகனத்திற்கு டயர் & டீயூப் சப்ளை செய்யும் பணி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10200/-க்கு ஆணையர் அவர்கள் நாள்.20.01.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 23/01/2020 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலைவிகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 7 |
| 1. | வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20ன் கீழ் வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான TN 23 CC 7436 Tata AC வாகனத்திற்கு டயர் & டீயூப் சப்ளை செய்யும் பணி. | 11000/- | GEM Wheels, Vellore<br><br>GEM Tyres Retreders, vellore<br><br>GEM Tyres PVT Ltd Vellore | 10200 /–L1<br><br>10400 /–L2<br><br>10600 /–L3 | L1-ல் -10200 /– மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |

மேற்படி பட்டியலில் கண்ட பணிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதத்தில் விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, பட்டியலில் கண்ட வ.எண் 1 பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொது நிதி 2019-20ன் கீழ் செலவு செய்யலாம்.
3. பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள M/S GEM Wheels ,Vellore- Rs.10200 /–L1 என்ற நிறுவனத்தின் விலைபுள்ளி ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டதற்கும் முன் அனுமதிக்கும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:2115/எச்1/2020)

(4) வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20ன் கீழ் வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான TN 23 CC 1797 Tata AC வாகனத்திற்கு டயர் & டீயூப் சப்ளை செய்யும் பணி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10200/-க்கு ஆணையர் அவர்கள் நாள்.20.01.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 23/01/2020 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலைவிகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20ன் கீழ் வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான TN 23 CC 1797 Tata AC வாகனத்திற்கு டயர் & டீயூப் சப்ளை செய்யும் பணி. | 11000/- | GEM Wheels, Vellore<br><br>GEM Tyres Retreders, vellore<br><br>GEM Tyres PVT Ltd Vellore | 10200 /–L1<br><br>10400 /–L2<br><br>10600 /–L3 | L1-ல் -10200 /– மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |

மேற்படி பட்டியலில் கண்ட பணிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதத்தில் விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, பட்டியலில் கண்ட வ.எண் 1 பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொது நிதி 2019-20ன் கீழ் செலவு செய்யலாம்.
3. பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள M/S GEM Wheels ,Vellore- Rs.10200 /–L1 என்ற நிறுவனத்தின் விலைபுள்ளி ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டதற்கும் முன் அனுமதிக்கும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:2116/எச்1/2020)

(5) வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20ன் கீழ் வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான TN 23 CC 1797 Tata AC வாகனத்திற்கு பேட்டரி சப்ளை செய்யும் பணி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3750/-க்கு ஆணையர் அவர்கள் நாள்.24.01.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 31/01/2020 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலைவிகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | வேலூர் மாநகராட்சி பொது நிதி 2019-20ன் கீழ் வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான TN 23 CC 1797 Tata AC வாகனத்திற்கு பேட்டரி சப்ளை செய்யும் பணிக்கு. | 11000/- | Bharathi Battery Distrbutors-Vellore<br><br>Shree Somsson Battery Centre, vellore<br><br>SK Batteries Vellore | 3750 /–L1<br><br>3900 /–L2<br><br>3950 /–L3 | L1-ல் -3750 /– மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக வழங்கப் பட்டுள்ளதை ஏற்கலாம் |

மேற்படி பட்டியலில் கண்ட பணிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதத்தில் விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, பட்டியலில் கண்ட வ.எண் 1 பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இப்பொருள் மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை பொது நிதி 2019-20ன் கீழ் செலவு செய்யலாம்.
3. பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள M/S Bharathi Battery Distrbutors-,Vellore- Rs.13750 /–L1 என்ற நிறுவனத்தின் விலைபுள்ளி ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டதற்கும் முன் அனுமதிக்கும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:50/எச்1/2020)

(6) ஊரகம் மற்றும் நகர்புறம் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் 9 மாவட்டங்களுக்கு வார்டு மறுவரையறை மேற்கொள்ளுதல் தொடர்பாக வார்டு மறுவரையறை ஆணையம் சென்னை அவர்களின் 07.02.2020 ம் தேதிய காணொலி கூட்டம், மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையார் சென்னை அவர்களின் 12.02.2020 ம் தேதிய வார்டு மறுவரையறை குறித்து ஆய்வுக்கூட்டம் மேலும் வேலூர் மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படி வேலூர் மாநகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வார்டு மறுவரையறைக்கான வரைவு கருத்துருவினை மாவட்ட மறுவரையறை அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரால் 18.02.2020 அன்று பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் ஆகியோர்களிடமிருந்து ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் தெரிவிக்க பார்வைக்கு வெளியிடப்பட்டது. மேலும் வேலூர் மாநகராட்சியின் மைய அலுவலகம் மற்றும் மண்டல அலுவலங்களிலும் அறிவிப்பு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து 18.02.2020 முதல் 22.02.2020 வரையிலான ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 நாட்களில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினரிடமிருந்து ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் பெறப்பட்டு வரப்பெற்ற மனுக்களின் அடிப்படையில் வார்டு மறுவரையறை கருத்துருவினை மாவட்ட மறுவரையறை அலுவலர்/மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து 18.02.2020 முதல் 22.02.2020 வரை பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினரின் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துகள் பெறப்பட்டு மனுக்களின் மீது 25.02.2020 அன்று மாவட்ட வரையறை அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் அவர்களால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினர்களிடமிருந்து கருத்து கேட்பு கூட்டம் நடத்தி அன்று பெறப்பட்ட மனுக்களின் மீது ஆய்வு செய்து அதன் அடிப்படையிலும் வேலூர் மாநகராட்சியில் வார்டு மறுவரையறை செய்து இறுதி வார்டு மறுவரையறை கருத்துருவினை வேலூர் மாவட்ட மறுவரைறை அலுவலருக்கும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும் மற்றும் தமிழ்நாடு மாநில மறுவரையறை ஆணையத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் தமிழ்நாடு மாநில வார்டு மறுவரையறை ஆணையர் மற்றும் வேலூர் மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களின் தலைமையில் 06.03.2020 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கூட்டத்தின் போது பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினரின் ஆட்சேபணை மற்றும் கருத்துக்கள் பெறப்பட்டு அதனடிப்படையில் கடைசியாக வார்டு மறுவரையறை கருத்துருவினை இறுதி செய்யப்பட்டது.

எனவே வேலூர் மாநகராட்சியின் வார்டு மறுவரையறை சம்மந்தமாக பல்வேறு கருத்துக்கள்/ஆலோசனைகள்/ஆட்சேபணைகள் தெரிவித்து மாநகராட்சி ஆணையரிடமும், மாவட்ட மறுவரையறை அலுவலரிடமும், மாநில மறுவரையறை ஆணையரிடமும் நேரடியாகவும்/கடிதங்கள் மூலமாகவும் 41 மனுக்கள் பெறப்பட்டு, பெறப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்து 11 மனுக்களில் குறிப்பிட்டிருந்த கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டும், 30 மனுக்கள் நிராகரிக்கப்பட்டும் பரிசீலித்து தயாரிக்கப்பட்டுள்ள இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துருவினை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுவதுடன், இக்கருத்துருவினை தமிழ்நாடு மாநில மறுவரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) வேலூர் மாநகராட்சியில் வார்டு மறுவரையறை செய்து இறுதி செய்யப்பட்ட வார்டு மறுவரைறை கருத்துருவினை மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) இறுதி வார்டு மறுவரையறை செய்யப்பட்டது குறித்து பிற்காலத்தில் இதுசம்மந்தமாக வழக்கு ஏதேனும் தொடரப்பட்டால் வழக்கு செலவுகளுக்கும் மற்றும் இதர செலவுகளுக்கும் உரிய தொகை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1215/2020/சி2**

(7) வேலூர் நகராட்சி **01.08.2008** முதல் மாநகராட்சி நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு அதனைத் தொடர்ந்து கடந்த **2011**ம் ஆண்டு எல்லை விரிவாக்கத்தின் படி இரண்டு அண்டை நகராட்சிகள், **6** பேரூராட்சிகள் மற்றும் **9** ஊராட்சிகள் இணைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசாணை எண்.**125** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**26.11.2018**ல் வேலூர் மாநகராட்சிக்கு மாநகராட்சிப் பணி விதிகளின்படி ஒருங்கிணைத்து பதவி பெயர் மாற்றம் செய்தல், காலாவதியான பணியிடங்கள் புதுப்பித்து நிரப்புதல் மற்றும் இதர ஒரு சிலப் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இம்மாநகராட்சியில் ஊராட்சி செயலர் நிலையில் காலமுறை ஊதியத்தில் பணிபுரிந்த திரு.S.சந்திரசேகரன் மற்றும் திரு.S.கார்த்திக் அவர்களுக்கு அரசு ஆணை எண்.154 நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.05.12.2014ன்படி இப்பணியாளர்களுக்கு பதிவுரு எழுத்தர் நிலையில் பதவி உயர்வும் மற்றும் அதற்குண்டான ஊதியம் நிர்ணயம் செய்தும் இதன் தொடர்சியாக இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.சி1/6091/2018, நாள்.12.12.2019–ன் படிமேற்படி பணியாளர்களுக்கு கல்வி தகுதிகளைத் இரண்டு ஆண்டுகாலத்திற்குள் நிறைவு செய்தல் வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசு தனது ஆணை 69 நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.21.02.2020ல் மதுரை, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மாநகராட்சியில் ஊராட்சி செயலாளர் நிலையில் பணிபுரிந்து வரும் 18 பணியாளர்களை வருவாய் உதவியாளராக பணிவரன் முறை செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்மாநகராட்சியில் தற்போது நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணியமர்த்தப்பட்டு இளநிலை உதவியாளர் நிலையில் பணிபுரிந்து வரும் திரு.S.சந்திரசேகரன் மற்றும் திரு.S.கார்த்திக் என்பவர்கள் மேற்படி அரசாணை அடிப்படையில் தங்களையும் வருவாய் உதவியாளர் நிலையில் பணிவரன் முறை செய்ய உரிய ஆணை பெற நடவடிக்கை மேற்கொள்ளும்படி விண்ணப்பம் செய்துள்ளனர் இதன்படி இவ்விருவரையும் வருவாய் உதவியாளர்களாக பணி வரன்முறை செய்து கொள்ள ஏதுவாக உரிய ஆணையினை வழங்கிட அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக உரிய கருத்துரு அனுப்பிட மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.சி1/3864/2014**

**(8)** கோயம்பத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு வேலூர் மாநகராட்சியின் பங்குத்தொகை 2019-2020 ஆண்டிற்கு ரூ.2.00 லட்சம் செலுத்த மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

அவசர அவசிய கருதி ஆணையர் (ம) தனிஅலுவலர் முன் ஒப்புதல் பெற்று தொகை செலுததப்பட்டதனை மாமன்ற அனுமதிக்கலாம்

(ந.க.எண்:12917/2016/சி1)

**(9)** வேலூர் மாநகராட்சி மண்டலம்-I ல் அரசு மற்றும் மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் கழிவறை சுத்தம் செய்யும் பணியினை செய்ய பணியாளர்களை வினியோகம் செய்து பணியினை மேற்கொள்ள திருவாளர் GESM Entrantment நிறுவனத்தாரருக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தகாலம் 31.02.2019 தேதியுடன் முடிவடைகின்ற நிலையில் மறுஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் அதற்கான கால அவகாசம் மேலும் தேவைப்படுவதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தற்போதுள்ள ஒப்பந்த காலத்தினை மேலும் ஓராண்டு நீட்டிப்பு செய்ய மாமன்ற அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. உத்தேச செலவினம் ரூ.25.22 லட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலககுறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினம் ரூ.25.22 கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்:14825/2018/எச்1)

**இடம் : வேலூர்**

**நாள் : 12.03.2020**

**(க. கிருஷ்ணமூர்த்தி)**
**ஆணையாளர் (ம) தனிஅலுவலர்**
**வேலூர் மாநகராட்சி**